## கோபாலபுரத்தின் குலக்கொழுந்தே!

# கொள்கைக் குன்றே! குணாளனே.. உனை மறவோம்!

திராவிடம் போற்றிய
திருமகனே
தென்னகத்து இமயத்தின்
மருமகனே
தண்ணார் மொழிபருகித்
தான்வளர்ந்த
தமிழ்மகனே
தென்றலாய்த் தவழ்ந்து
தீயாய் வெளிப்பட்ட
தீரனே..
மூன்றாவது தூணாய்
முரசொலியைக் காத்திருந்த
மொழிப்போர் வீரனே

கோபாலபுரத்துக் குலக்கொழுந்தே
கொள்கைக் குன்றே
குணாளா..
நீ போய்விட்டாயா!
நினைக்கவே தடுமாறுகிறது
நெஞ்சம்!

நீ பின்னிய ‘சிலந்தி’ வலையில்
சிக்கிக் கிடந்த
சித்தமெல்லாம்
நிலைகுலைந்து கிடக்கின்றன
தற்போது!

தமிழக முதல்வர் எங்கள்
தங்கத் தளபதி சொன்னார்:
‘துயரத்தில் சாய்ந்து கொள்ளக்
கடைசியாய்க் கிடைத்த
தோளை இழந்தேன்’ என்று!
உருக்கத்தின் உள்ளிருந்து புறப்பட்டு
கருக்கலையாமல் வந்துதித்த
காவியச் சொற்கள் அவை.
கண்ணீரின் வேர்கள் அவை!

ஆறுதல் ஆலோசனை
அறிவுரை தெளிவுரை
என்று
அனைத்துக்குமான
ஆளுமையாய்,
பஞ்சுப் பொதிபோலப்
பரிவுடன் அணைக்கும்
பாசத் தாய்மடியாய்,
படர்ந்திருந்த நீ
எங்கள் தலைவரை விட்டு
எங்கே போனாய்?

செல்வி பிறந்தபோது
கலைஞர் சொன்னாராம்:
‘செல்வத்துக்குப் பிறந்துவிட்டாள்
செல்வி’ என்று.
கல்விச் சமுத்திரமாய்
எங்கள்
செல்விக்குக் கிடைத்த
செல்வக் களஞ்சியமே..
நீ எங்கே போய்விட்டாய்?

கலைஞரின் அடிச்சுவடுகளைக்
கடைநாள் வரைக்கும்
படியெடுத்து வரலாற்றின்
பார்வைக்கு வைத்த
பண்பாளன் நீ..
அரசியல் மாச்சரியங்களுக்கு
அப்பால்
ஆச்சரிய நட்புகளை
அனைவரிடமும் வைத்திருந்த
அன்பாளன் நீ..
அறிவாலயச் சுவர்களின்
அகல நீளமறிந்த
ஆய்வாளன் நீ..

புத்தகங்களைப் புரட்டி
புத்துலகச் சிந்தனைகளைத் திரட்டி,
பொழுதுகள் தோறும்
ஒரு
கர்ப்பிணிப் பெண்ணைப் போலக்
கருத்துகள் சுமந்து
களமாடிய
பகட்டில்லாத பத்திரிகையாளன் நீ..
சட்டமன்றத்திற்கு அழைத்து
உன்னைக்
கூண்டிலே நிறுத்திக்



குடிலர் கூட்டம்
குற்றம் சொன்னபோது,
‘கலைஞரின்
குணசேகரனாய்’ நீ
கொள்கை முழக்கிய தருணம்
இன்று நினைத்தாலும்
இதயம் சிலிர்க்கிறதே..!

கூண்டு கண்டேன்
குதூகலம் கொண்டேன்’
என்று
உனக்காகக் கலைஞர் தீட்டிய
ஒப்பில்லாக் கட்டுரை
உன்
வானளந்த துணிவுக்கு
வாசித்து அளிக்கப்பட்ட
வாழ்த்துப் பத்திரம் அல்லவா!

அறிஞர் அண்ணாவால்
‘செல்வா’ என்று அழைக்கப்பட்ட
செல்வத்துட் செல்வம் நீ,
எங்களை விட்டுச்
செல்வாய் என்று
சிந்திக்கவே தோன்றாத தருணத்தில்
சிந்திப்போய்விட்ட
செல்வமாகி விட்டாயே..
இது என்ன நியாயம்!

என்
மூத்தபிள்ளை
முரசொலி என்று
கலைஞர் கொண்டாடிய தளத்தில்
கடைசிவரை உயிர்வைத்துக்
கடமையாற்றிய நீ
கண்மூடிக் கொண்ட
கவலைக்கு முடிவேது?

முன்னைத் தலைவர்க்கும்
முத்தமிழ் அறிஞரின்
பின்னைத் தலைவர்க்கும்
பேசுபொருள் பலதந்த
பெருங்காப்பியம் அல்லவா நீ!
இரக்கமே இல்லாமல்
இயற்கை உன்
ஏடுகளை மூடிவிட்டதே,

இனி நாங்கள்
எங்கே போய் நிற்பது!
எவரிடம்போய்க் கற்பது?

தேன்கலந்து பால்கலந்து
தீச்சுவையும் தான்கலந்து
அங்கதமாய் அனற்பொறியாய்
அறங்கூறும் தமிழவையாய்
சிங்கமென நீபடைத்த
சித்திரங்கள் மறப்போமா!
காற்றுக்கும் திசைகாட்டும்
கருப்பொருளை நீவடித்து
வீற்றிருக்கும் செம்மாப்பை
நினையா திருப்போமா?

கலைஞரின் மனசாட்சியாய்
அறிவுலக மன்னன்
உன்
அண்ணன் இருந்தார்.
தளபதியின் மனசாட்சியாய்..
நித்திலக் குன்றமே
நீயலவோ இருந்தாய் !

அனுபவப் பாடங்கள்
அனைத்துச் சொல்வதிலும்
நெடுங்காலத் தகவல்கள்
நினைத்துச் சொல்வதிலும்
இன்னொரு கலைஞராய்
இருந்த நீ…
எங்களை விட்டு
எங்கே போய்விட்டாய்?

மறைபொருளாய் இருந்து
மாணிக்க ஒளிதந்து
மயக்கங்கள் தீர்த்து
மகுடங்கள் புனைந்த நீ…
மரணித்து விட்டாய் என்று
மனமொப்புக் கொள்ளாது!

மூலை முடுக்கெல்லாம்
முரசொலிக்கும் உன்றன்
மூதறிவு எங்கள்
ஆறறிவுக்குள்ளே
அடர்ந்திருக்கும்…
எப்பொழுதும்!

அடக்கம் அறிவுடைமை
அஞ்சாமை துஞ்சாமை
அனைத்துக்கும் பொருளாகி
வாழ்வாய் நீ..
முப்பொழுதும்!

**டாக்டர்**
**எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர்



---

தி.மு.க. நெசவாளர் அணி

## மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. நெசவாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாளை (17.10.2024 - வியாழக்கிழமை) காலை 10.30 மணி அளவில் ஈரோட்டில் உள்ள ஈரோடு மாவட்டக் கழக அலுவலகத்தில், எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம் - செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் ஆகியோர் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் அருப்புக்கோட்டை க.பழனிசாமி, காஞ்சிபுரம் தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன் துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி, தேனி ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்தநாள் விழா;
2. 2026சட்டமன்ற பொதுத்தேர்தல்
3. ஆக்கப் பணிகள் குறித்து.

“அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள்: 14.10.2024.

**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி மயிலம் வடக்கு ஒன்றியம் தீவனூரில் நடைபெற்ற மைலம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டத்தில்தேர்தல் பணிக்குழு செயலாளரும், மைலம்தொகுதி பார்வையாளருமான கடலூர் புகழேந்தி கலந்து கொண்டு வாக்காளர்கள் பெயர் பட்டியல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுத்தினார்.உடன் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய பெருந்தலைவர்கள் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், வல்லம் அமுதா ரவிக்குமார் மற்றும்திமுக நிர்வாகிகள் உள்ளனர்

---

தருமபுரி மேற்கு மாவட்டத்தில்

## கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா - மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி!

தருமபுரி, அக். 16 -

தி.மு.க. இளைஞரணி மற்றும் கலைஞர் தொலைக் காட்சி இணைந்து நடத்தும் ‘என் உயிரினும் மேலான’ கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி மாநிலம் முழுவதும் மாவட்ட அளவில் கடந்த மாதம் நடைபெற்றது.

அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மண்டல அளவிலான பேச்சுப்போட்டி தருமபுரி தனியார் கல்லூரியில் நடைபெற்றது. நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து வெற்றி பெற்ற மாணவ - மாணவியர்கள் இந்த மண்டல அளவிலான பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டனர்.

இந்த போட்டிக்கு நடுவர்களாக ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினரும் கழக மருத்துவரணி மாநில செயலாளருமான மருத்துவர் எழிலன்,கழக மாநில மாணவரணி தலைவர் ராஜீவ் காந்தி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் டான் அசோக் , ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சி மாநில இளைஞரணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் தலைமையிலும், தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி. பழனியப்பன், கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்ரமணி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஆர் சிவகுரு,எம். ஜி.எஸ். வெங்கடேஸ்வரன், மற்றும் துணை அமைப்பாளர்கள் பி.என். சி.மகேஷ்குமார், தீ. கோடீஸ்வரன், பி.டிஹரி பிரசாத், எ.நாசர், தங்கச் செழியன், வழக்கறிஞர். அசோக்குமார், என்.எஸ். கலைச்செல்வன், கே.ஆர். சி.செல்வராஜ், பெ.ராஜ கோபால், த. கார்த்தி,ஆர். பி.முத்தமிழன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

---



திருவெறும்பூர் தொகுதியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மழையின் காரணமாக இடிந்த வீட்டை பார்வையிட்டு நிதியுதவி வழங்கினார். திருச்சி திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட மேலகல்கண்டார் கோட்டை கணேஷ் நகர், 45 ஏ வட்டத்தில் அன்பழகி வீடு மழையின் காரணமாக இடிந்தது. அந்த வீட்டை பார்வையிட்டு திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிதியுதவி வழங்கி வீட்டை மறு கட்டமைப்பு செய்வதற்கு அதிகாரிகளை கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் தர்மராஜ் உடன் இருந்தனர்.



தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி டெல்லியில் ரயில்வே வாரிய தலைவர் சதீஷ்குமாரைச் சந்தித்து தஞ்சை நாடாளுமன்ற தொகுதி மக்களின் பல்வேறு ரயில்வே பணிகளுக்கான கோரிக்கைகளை மனுவாக வழங்கினார், கோரிக்கைகளை உடன் ஆய்வு செய்த ரயில்வே வாரிய தலைவர் அனைத்து கோரிக்கைகளின் மீதும் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். மேலும் திருச்சியில் இருந்து தஞ்சாவூர் வழியாக தாம்பரம் வரை இயக்கப்படும் புதிய சிறப்பு ரயிலை தினசரி இயக்குவதற்கு நெறிமுறை படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தார்.